நாடி
Pulse of the Singapore Muslim Community

நாடி 7 ஹிஜ்ரி 1429 ஜமாஅத்துல் அவ்வல் மே 2009

இலவசம்

# மறுசீரமைக்கப்பட்ட இஸ்லாமிய சமய மன்ற (MUIS) வளாகம்



# பள்ளிவாசல்களின் நற்பணிகளுக்குப் பாராட்டு

சிங்கப்பூர் பள்ளிவாசல்கள் பல இன, சமூகப் பிணைப்புக்குப் பாலமாகத் திகழ்கின்றன. தற்காலத் தேவைகளுக்கு ஏற்ப திறந்த மனப்போக்குடன், மறுமலர்ச்சிக் கண்ணோட்டத்துடன் அவை செயல்படுகின்றன.

நகர மையத்தில் அமைந்துள்ள அல் அப்ரார், அப்துல் கபூர், ஜாமியா சூலியா பள்ளிவாசல்கள் இதற்கு முன்னுதாரணங்கள். தேசிய மரபுடைமைச் சின்னங்களான இந்தப் பள்ளிவாசல்கள் குடியரசுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு சிங்கப்பூர் முஸ்லிம்களின் வரலாறு, அடையாளம், பங்களிப்பு ஆகியவற்றை எடுத்துரைக்கின்றன. குறிப்பாக, தமிழ் மொழிபேசும் புதிய சிங்கப்பூரர்களும். நிரந்தரவாசிகளும் சிங்கப்பூர் பின்னணிகளை அறிந்துபழக உதவுகின்றன. கதீஜா பள்ளிவாசலின் பங்கும் குறிப்பிடத்தக்கது. பங்களாதேஷ் ஊழியர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள் இதில் இடம் பெற்றுவருகின்றன. மற்ற பல பள்ளிவாசல்களும் பன்னோக்குப் பணிகளுக்குக் களமாக விளங்குகின்றன.

மேலும், தேசிய, சமூக அமைப்புகள் பரந்த அளவில் உதவித் திட்டங்களை வழங்குகின்றன. சமூக மேம்பாட்டு மன்றங்கள், குடும்ப சேவை அமைப்புகள் போன்றவை உதவிக்கரம் நீட்டுகின்றன. முஸ்லிம் மக்களுக்கு இந்த உதவிகளை எட்ட வைப்பதில் பள்ளிவாசல்கள் முக்கிய பங்காற்ற வேண்டும்.

முஸ்லிம் விவகாரங்களுக்கான அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் முயிஸ் *2009* பாடத் திட்டக் கருத்தரங்கில் வெளியிட்ட சிந்தனைகள் இவை.

### இந்திய முஸ்லிம்களின் பங்களிப்பு

சிங்கப்பூர் இந்திய முஸ்லிம்களின் பலதுறைப் பங்களிப்புகள் பாராட்டுக்குரியவை. பயன் மிக்கவை. இந்திய முஸ்லிம் அமைப்புகள் புதிய திட்டங்களை மேற்கொள்ளும்போது தற்போதுள்ள வளங்களைப் பயன்படுத்திக் கொள்வது அவசியம். அதனால் சிங்கப்பூரர் அனைவரும் பயனடைவார்கள் என்று அவர் கூறினார்.

இதற்கு முன்னுதாரணமாக சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக், ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம் ஆகியவை *2006* முதல் சமுதாயத் தலைவர்கள் குறித்த மாநாட்டில் பங்காற்றி வருகின்றன. இரு சங்கங்களும் சுமார் *160* தமிழ் முஸ்லிம் குடும்பங்களை ஒருங்கிணைத்து மேம்பாட்டுத் திட்டங்களின் பயன்களைப் பெறுவதற்கு உதவியுள்ளன என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கப்பூர் இந்திய முஸ்லிம்கள் சமுதாய உயர்வுக்கு ஆற்றிவரும் பங்குக்கு சில எடுத்துக்காட்டுகள்:

மெண்டாக்கி, சிண்டா ஆகிய அமைப்புகளுக்கு இந்திய முஸ்லிம்கள் பணம் மற்றும் சேவை அடிப்படையில் பங்காற்றுகிறார்கள்.

மெண்டாக்கி ஆண்டுதோறும் வழங்கும் தலைசிறந்த மாணவர்களுக்கான விருதில் ஐந்தில் ஒரு பங்கை இந்திய முஸ்லிம் மாணவர்கள் பெறுகின்றனர்.

சிண்டாவின் விருதைப் பெறுவதிலும் அவர்கள் பின்வாங்கவில்லை. இந்தப் பங்களிப்புகள் பெருமைப்படத் தக்கவை.

முயிஸ் நடத்தி வரும் ஆங்கில மதரஸா திட்டம் பிரபலமாகி வருவதால் எல்லா அமைப்புகளும் அதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்திய முஸ்லிம் பள்ளிவாசல்களில் நிகழ்த்தப்படும் உரைகள். சமூகத்திற்கு ஏற்றவாறு இருப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவர்கள் முக்கியம் எனக் கருதும் அம்சங்கள் உரையில் இடம் பெறுவதைப் பரிசீலித்து ஆவன செய்வதற்காக இந்திய முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகளின் வழிகாட்டிக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இவை, சுல்தான் பள்ளிவாசல் இணை மண்டபத்தில் நடைபெற்ற உரையரங்கில் அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் தெரிவித்த கருத்துகள்.

# டாக்டர் ஹிமானா சையத் நூல் வெளியீட்டு விழா




எழுத்தாளரும் மருத்துவருமான ஹிமானா சையத் அவர்களின் ஊற்றுக்கண், வெப்பமூச்சுகள் ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா 1.3.2009 அன்று பிற்பகல் மஸ்ஜித் பென்கூலன் பன்னோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

தொழிலதிபர் ஹாஜி சீ.மு.நூ.மு முகம்மது யூசுப் தலைமை வகித்தார். ஹாஜி எம்.ஏ.முஸ்தபா, ஆசியான் கவிஞர் க.து.மு. இக்பால், ஹாஜி மு.அ.மசூது முதலானோர் முன்னிலை வகித்தனர்.

சிங்கப்பூர் நாணயமாற்று வணிகர் சங்கத் தலைவர், புதிய நிலா இதழ் ஆசிரியர் மு. ஜஹாங்கீர் வரவேற்புரையாற்றினார்.

தலைவரின் உரையை அடுத்து நூல்கள் அறிமுகம் செய்யப்பட்டன. தொலைக்காட்சி ஊடகத் துறையில் பணியாற்றிய எம்.முகம்மது அலி ஊற்றுக்கண் நூலை ஆய்வு செய்தார். தமிழக இதழ் ஒன்றில் டாக்டர் ஹிமானா சையத் எழுதிய தொடர்கட்டுரைகளின் தொகுப்பே ஊற்றுக்கண்.

இக்கட்டுரைகள் நடப்பியல் சார்ந்த பதிவுகள் தான். ஒரு கிராம மருத்துவனாக, எழுத்தாளனாக, கல்வியாளனாக, சமுதாய களப்பணி ஊழியனாக என் கிராமத்தை மையமாக வைத்து வாழ்ந்த என் சொந்த அனுபவங்களின் பின்னணியில் - வெளிச்சத்தில் இவற்றைப் பதிவு செய்திருக்கிறேன் என்று ஹிமானா சையத் குறிப்பிட்டுள்ளதை சில மேற்கோள்களுடன் தமது ஆய்வுரையில் சுட்டிக்காட்டினார் எம்.முகம்மது அலி.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் சுப.திண்ணப்பன் வெப்பமூச்சுகள் நாவலை ஆய்வு செய்தார். ஹிமானா சையத் தமிழக நர்கிஸ் மகளிர் மாத இதழில் பல ஆண்டுகள் தொடராக எழுதிய புதினம் இது. வருவாய்க்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் முஸ்லிம் ஆடவர்களின் நிலையை உணர்த்தும் புதினம் இது என்பதை அவர் விரிவாக தமது உரையில் எடுத்துரைத்தார்.

மலேசிய நாணயமாற்று வணிகர் சங்கத் தலைவர் ஹாஜி எம்.ஓய்.முஹம்மது சுஐபு, நூலாசிரியர் மா.அன்பழகன் ஆகியோர் நூலாசிரியர் ஹிமானா சையதின் பணிகளைப் பாராட்டி வாழ்த்துரை வழங்கினர்.

தமிழ் மொழி பண்பாட்டுக் கழகத் தலைவர் திரு. மு.ஹரி கிருஷ்ணன், ஊற்றுக்கண், வெப்பமூச்சுகள் நூல்களை வெளியிட்டார். முதல் பிரதிகளை மஸ்ஜித் பென்கூலன் நிர்வாகக் குழுவின் தலைவரும் தொழிலதிபருமான அல்ஹாஜ் எஸ்.எம்.ஜலீல் பிபிஎம் சார்பில் அவருடைய புதல்வர் பெற்றுக்கொண்டார்.

நூலாசிரியர் ஹிமானா சையத் நர்கிஸ் இதழின் கவுரவ ஆசிரியராகப் பணிபுரிந்து வருவதைக் குறிப்பிட்டு, வெளியீடு கண்ட நூல்களின் பின்னணிகளையும், தமது எதிர்கால இலக்குகளையும் விவரித்தார்.

நிகழ்ச்சி நெறியாளர் சங்கம் எம்.இலியாஸ் வருகையளித்த அனைவருக்கும் ஏற்பாட்டுக் குழுவின் சார்பில் நன்றி தெரிவித்தார்.

---

## பிரடல் சாலையில் $6.9 மில்லியன் செலவில் பள்ளிவாசல், கல்வி மையத்துடன் முயிஸ் வளாகம் புதுப்பிக்கப்பட்டு 16-1-2009ல் திறப்பு விழா கண்டது.



# அரும் மனிதர் அ.நா.மெய்தீன்

சிங்கப்பூரில் தமிழ்க் கல்வி வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டவர். தென் கிழக்காசியாவில் ஒரே தமிழ் உயர்நிலைப் பள்ளியாக ஒளிவீசிய உமறுப் புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளியைத் தோற்றுவிப்பதில் வெற்றி பெற்றவர். அந்த முன்னோடி அ.நா.மெய்தீன் அவர்களை மூத்த தலைமுறை சிங்கப்பூரர்கள் நன்கறிவர்.

தஞ்சோங் பகார் கடைவீட்டில் கடைய நல்லூர் முஸ்லீம் லீக் இயங்கி வந்த அறையில் 1946 மார்ச் மாதம் இரவுநேர தமிழ்ப் பள்ளி தொடங்கப்பட்டது. மாணவர் எண்ணிக்கை 54. சீறாப்புராணம் இயற்றிய உமறுப் புலவரின் பெயரை பள்ளிக்குச் சூட்டினார் அ.நா.மெய்தீன்.

அடுத்த கட்ட வளர்ச்சியாக 1949 பிப்ரவரி மாதம் மேக்ஸ்வெல் சாலையில் இரு வகுப்பறைகளைக் கொண்ட பள்ளிக் கட்டடத்தை எழுப்ப அன்றைய அரசு அனுமதி வழங்கியது. 16 ஆயிரம் வெள்ளி செலவில் உமறுப் புலவர் பள்ளிக் கட்டடம் உருவாக்கப்பட்டு 1950 மார்ச் 17 அன்று திறப்புவிழா நடைபெற்றது. அடுத்தடுத்து வளர்ச்சிப் பணிகளில் முனைந்தார் அ.நா.மெய்தீன்.

## சமுதாய உணர்வு

முன்னோடி அ.நா.மெய்தீன் அவர்களின் தொடக்க முகவரி: நெல்லை மாவட்ட கடையநல்லூரில் 17.6.1913 அ.பி.நாகூர் மசூது தம்பதியரின் இரண்டாவது மகனாகப் பிறந்தார். 1918ல் முதல் உலகப் போர் முடிவுற்றதும் இந்தியாவை பஞ்சம் உலுக்கியது. உணவுக்கு வழியில்லாமல் தவித்தவர்கள் வாழ்வுக்கு வழிதேடி கப்பலேறி நாடுகடக்க முற்பட்டனர். ஏழு வயதில் சிங்கப்பூருக்கு வந்து இரவுப் பள்ளிக்கூடத்தில் படித்தார். 11 வயதில் அலுவலகங்களில் வேலை பார்க்கத் தொடங்கினார்.

சமுதாயப் பணி ஆர்வம் மேலிட்டதால் அ.நா.மெய்தீன் 17 வயதில், 1930ல் முஸ்லிம் அபிவிருத்தி சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் ஆனார். தம்மைப் போல் நம் சமூக இளையர்கள் இரவு நேரப் பள்ளியில் சிரமப்பட்டுப் படிக்காமல் சிறப்பான வசதிகளுடன் கல்வி பயின்று உயர வேண்டும் என்ற உணர்வுத் துடிப்பு அவருக்கு மேலிட்டது. அதன் விளைவு தான் உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளியின் உருவாக்கம். அந்த வரலாறு நூல்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.



## நினைவுச் சுவடுகள்

“நெஞ்சில் பதிந்த நினைவுச் சுவடுகள்” அ.நா.மெய்தீன் அவர்கள் எழுதிய நூல். சிங்கப்பூர் தமிழ்க் கல்வி வளர்ச்சிக்காக 1950-1960களில் அயராது தாம் பாடுபட்டதையும், கட்டாயக் கல்வி, குடியுரிமை, கட்டாய வாக்களிப்பு போன்ற சமுதாயக் கடப்பாடுகளுக்காக உழைத்ததையும் எழுத்தில் வடித்திருக்கிறார். திரையரங்குகளின் அக்கால நடைமுறைகளைத் திருத்தியமைக்கவும் அவர் வழிவகுத்தார்.

“உமறுப் புலவர் தமிழ்ப் பள்ளியின் வரலாறு 1946-1982” கே. பழனிசாமி வரைந்துள்ள நூல். தமிழகத்தைச் சேர்ந்த எழுத்தாளர் செ.திவான், அ.நா.மெய்தீன் அவர்களைப் பற்றி நூலில் எழுதியுள்ளதையும் அறிவோம்.

நாங்கள் ஏழைகளாக இருந்தாலும் நாணயத்தைக் காப்பாற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருந்தோம். இவ்விஷயத்தில் எவரும் குறை சொல்லாத அளவுக்கு நடந்து வந்தோம் என்று அ.நா.மெய்தீன் அவர்கள் எழுதிச் செல்லும் முறை நம்மை வசப்படுத்துகிறது.

தாம் சந்தித்த எதிர்ப்புகளையும் அவர் ஒளிவு மறைவின்றி வரைந்துள்ளார். “ஏழை மனிதனுக்கு இப்பள்ளிவாயிலாக முக்கியத்துவம் ஏற்படுவது சிலருக்குப் பிடிக்கவில்லை. தங்கள் பதவிகளை அலங்கரிக்க வேண்டும், நான் அவர்களுக்கு ஓடியாடி வேலை செய்யும் சாதாரணத் தொண்டனாக மட்டும் இருக்க வேண்டும் என்பது அவர்களின் எண்ணமாகும்.

ஆனால் பொறுப்பும் அங்கீகாரமும் இல்லாமல் இவ்வளவு பெரிய பணியில் எவ்வாறு என்னால் ஈடுபட முடியும்? பள்ளிக்கட்டட நிதிக்காகத் தேவைப்படும் 75 ஆயிரம் வெள்ளியைத் திரட்ட வசதியும் துணிவும் படைத்தவர்கள் யாரேனும் முன் வந்தால் நிர்வாகக் குழுவிலிருந்து விலகிவிடத் தயாராக இருப்பதாகக் கூறினேன்...” அவருக்கு ஆதரவாக சிலர் குரல் எழுப்பினர். பதவி விரும்பிகள் பின் வாங்கினர்.

## உதவிக் கரங்கள்

தமது இலட்சியத்திற்கும் நற்பணிகளுக்கும் துணை நின்ற அரசியல், சமூகப் பெருமக்களை அவர் நினைவுகூர்ந்துள்ள மனப்பாங்கு நம்மைக் கவர்கிறது.

தமிழ் முரசு ஆசிரியர் தமிழவேள் கோ.சாரங்கபாணி அவர்களை அடிக்கடி சந்திப்பார் அ.நா.மெய்தீன். உமறுப் புலவர் உயர்நிலைப் பள்ளியின் உருவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் கோ.சா அவர்கள் முரசு வாயிலாக செய்திகளை வெளியிட்டு தலையங்கம் வரைந்து வந்தார். சிங்கப்பூரில் குடியேறியவர்களுக்கு அக்கால அரசாங்கம் குடியுரிமை வழங்க முன்வந்தபோது தமிழவேள் கோ.சா. தமிழர்களை ஊக்குவித்து ஆவன செய்தார். அவரைப் போன்றே அ.நா.மெய்தீன், கடையநல்லூர் முஸ்லிம் லீக் இல்லத்திலும், உமறுப் புலவர் தமிழ்ப் பள்ளியிலும் பதிவுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். தமது இலட்சியத்திற்கு துணை நின்ற நல்லோர்களுக்கும் அமைப்புகளுக்கும் நன்றி பாராட்டத் தவறியதில்லை நமது முன்னோடி அ.நா.மெய்தீன்.

உமறுப் புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளி 1959ல் பணப் பற்றாக்குறையினால் பல சிரமங்களை எதிர்நோக்கிய போது லீ அற நிறுவனத்தின் இயக்குநர் டத்தோ லீ கொங் சியானின் உதவியை நாடி இருபதாயிரம் வெள்ளி நன்கொடையை இருகட்டங்களில் பெற்றார்.

## வழிகாட்டி

1982ல் உமறுப் புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளி மூடப்பட்டு உமறுப் புலவர் தமிழ் மொழி மையம் உருவான வரலாற்றை அறிவோம். 1985ல் உமறுப் புலவர் கல்வி அறங்காவல் நிதி தொடங்கப்பட்டது. அ.நா.மெய்தீன் அவர்கள் தொடங்கிவைத்த நற்பணிகள் அவருடைய சாதனைச் சுவடுகளாக சமூக வளர்ச்சிக்கு உதவிக் கொண்டிருக்கின்றன.

முன்னாள் முதலமைச்சர் லிம் இயூ ஹாக், முன்னைய பிரதமர் லீ குவான் இயூ முதலான தலைவர்களின் நல்லன்பைப் பெற்றவர் பெரியவர் அ.நா.மெய்தீன். அவர் 22.6.1991 அன்று உயிர் நீத்தார்.

“நான் ஏழை, எளியவன், படிப்பறிவில்லாதவன் என்று தம்மைப் பற்றி அடக்கமாகச் சொல்லிக் கொள்ளும் மெய்தீன் அவர்களின் நினைவுச் சுவடுகளைப் பின்பற்றும் நமக்கு ‘அரிய காரியங்களைச் செய்த அபூர்வ மனிதர்’ அவர் என்ற எண்ணமே நிலைபெறுகிறது. சமுதாய நலத்திற்காகத் தன்னலமின்றி, ஆடம்பரமின்றி உழைக்கும் மெய்தீன்கள் ஒவ்வொரு தலைமுறையிலும் மிகப் பலர் தோன்றமாட்டார்களா என்னும் ஏக்கம் ஏற்படுகிறது.” வை.திருநாவுக்கரசு எழுதிய அணிந்துரை வரிகள் சமுதாய முன்னோடி அ.நா.மெய்தீன் அவர்கள் ஆற்றிய நற்பணிகளை எடுத்துரைக்கும் அரிய பதிவு.

## அரும்மனிதர்

“உமறென்னும் பெரும்புலவர் பெயரால் இங்கே
உயர்கல்விக் கூடத்தை எழுப்பலானார்
தமிழ்ப்புலவர் ஒருவருக்கு அவர் தாய்நாடு
தராத உயர் பரிசுதனை இங்கே தந்தார்
தமிழ்க்கல்வி எனும்விளக்கு எரிவதற்குத்
தம்முடலைத் திரியாக மாற்றிக் கொண்டு
இமைப்பொழுதும் சோராத உழைப்பு என்னும்
எண்ணெய் வார்த்த அரும்மனிதர்
ஏ.என்.மெய்தீன்

பணமில்லை, பதவியில்லை மதிக்கும் பட்டப்
படிப்பில்லை உண்பதற்கு அடுத்த வேளை
உணவில்லை என்றாலும் ஊருக்காக
உழைப்பதற்குச் சிறிதளவும் தயங்கவில்லை
மணக்கின்ற தமிழ்வளர அரை நூற்றாண்டாய்
மங்காத சேவை செய்து புகழ் குவித்த
குணக்குன்றம் மெய்தீனின் பணியனைத்தும்
கூறுதற்கு என்னிடத்தில் வார்த்தை யில்லை”

அதிசய மனிதர் அ.நா.மெய்தீன் எனும் நெடுங்கவிதையில் அந்த முன்னோடியின் அரும்பணிகளைப் பதிவு செய்துள்ளார் ஆசியான் கவிஞர் க.து.மு.இக்பால்.

- ஜே.எம்.எஸ்.

# MUIS PHOTO NEWS முயிஸ் படச் செய்திகள்



Minister's visit to Singapore Islamic Hub
on 5th Jan 2009



Minister's visit to Singapore Islamic Hub
on 5th Jan 2009



Humanitarian relief effort handover ceremony to Mercy Relief




Humanitarian relief effort handover ceremony to Mercy Relief



Investiture ceremony for MMB at Singapore Post
on 19 Feb 2009




Investiture ceremony for MMB at Singapore Post
on 19 Feb 2009



Islam and contemporary issues series with Tarek Fatah
at SMU on 6 Mar 2009



Islam and contemporary issues series with Tarek Fatah
at SMU on 6 Mar 2009

# MUIS PHOTO NEWS முயிஸ் படச் செய்திகள்



Maulid celebration at Al Istiqamah Mosque
on 8 Mar 2009



Maulid celebration at Al Istiqamah Mosque
on 8 Mar 2009



Korban appreciation dinner at Bencoolen Mosque
on 7 Jan 2009



Korban appreciation dinner at Bencoolen Mosque
on 7 Jan 2009



Singapore Haj mission appreciation dinner
at Golden Landmark Hotel



Singapore Haj mission appreciation dinner
at Golden Landmark Hotel



Media conference on special collection for Gaza
on 16 Jan 2009



Effective marketing techniques for aL.I.V.E. Ambassadors at MDIS

# மீலாத் விழாக்கள்

கடையநல்லூர் முஸ்லீம் லீக், நபி பெருமானார் (ஸல்) பிறந்த நாள் மீலாத் விழாவை மார்ச் 6 மாலையில் மௌலுது நிகழ்ச்சியுடன் குவின்ஸ்டவுன் அல் முஜாஹிதீன் பள்ளிவாசல் அரங்கில் கொண்டாடியது.

சங்க இல்லத்தில் நடைபெற்ற 12 நாள் மௌலுது நிகழ்ச்சியில் அன்றாடம் பெரும் எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொண்டனர். போதிய இடவசதி இல்லாவிட்டாலும் அணிஅணியாக ஆண்களும் பெண்டிரும் திரண்டனர். வரும் ஆண்டுகளில் விரிவான இடவசதியைப் பெறுவது சங்கத்தின் இலக்கு. இவ்வாண்டு நோன்புப் பெருநாளின்போது ஒன்றுகூடல் நிகழ்ச்சியை நடத்த கடையநல்லூர் முஸ்லீம் லீக் திட்டமிட்டுள்ளதாக செயலாளர் மு.அ.மசூது தமது வரவேற்புரையில் கூறினார். நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக அஸ்மான் அசீஸ் கலந்து கொண்டார்.

அகிலத்தின் அருட்கொடை அண்ணல் நபி(ஸல்) எனும் தலைப்பில் உரையாற்றினார் தலைமை உஸ்தாத் முஹம்மது முஹைதீன் ஃபைசி. டாக்டர் ஹிமானா சையத், சொல்லும் செயலும் என்ற தலைப்பில் நபி பெருமானார் காட்டிய நெறிமுறைகள் பற்றி பேசினார்.

கடையநல்லூர் முஸ்லீம் லீக் மதரஸா தொண்டுழியர்களுக்கும், மௌலுது நிகழ்ச்சியை சிறப்பித்த லெப்பைமார்கள், மௌலுது உபசரிப்புத் தேவைகளுக்கு உதவிய பெண்மணிகள் ஆகியோருக்கும் அஸ்மான் அசீஸ் அவர்களும் அவருடைய துணைவியாரும் சங்கத்தின் சார்பில் அன்பளிப்புகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

சங்கத் தலைவர் அல்ஹாஜ் நசீர் கனி, தங்களின் நற்பணிகளுக்கு ஒத்துழைப்பு நல்கிவரும் அனைவருக்கும் மீலாது நிகழ்ச்சிக்கு இடவசதி வழங்கிய அல் முஜாஹிதீன் பள்ளிவாசல் நிர்வாகத்துக்கும் நன்றி பாராட்டினார்.

தேனீர் உபசரிப்பு, மௌலுது தப்ரூக் வினியோகத்துடன் விழா நிறைவு பெற்றது.

## சொற்பொழிவுகள்

சுல்தான் பள்ளிவாசல் இணை மண்டபத்தில் மீலாத் சொற்பொழிவு 11.3.2009 மாலை நடைபெற்றது. உஸ்தாத் முஹம்மது இல்யாஸ் ஃபாஜில் ஜமாலி நாயகத்தின் நற்பண்புகள் எனும் தலைப்பில் உரையாற்றினார்.

டன்லப் ஸ்ட்ரீட் அப்துல் கபூர் பள்ளிவாசலிலும் மீலாத் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அப் பள்ளிவாசலின் இமாம் மௌலவி ஹாபிஸ் ரஃபீக் அஹமது ஃபாசில் பாகவி உரையாற்றினார்.

மற்ற பள்ளிவாசல்களிலும் மௌலுது நிகழ்ச்சியும் மீலாத் சொற்பொழிவுகளும் சிறப்பாக நடைபெற்றன.





## சி.தெ.மு.ந. சங்க அல் மதரஸா ஆண்டு விழா



சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம், அல் மதரஸா நூருல் இஸ்லாம் ஆண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடியது.

கடந்த பிப்ரவரி முதல்நாள் நடைபெற்ற அந்த விழாவில் இந்திய முஸ்லிம் சங்கங்கள் மற்றும் பள்ளிவாசல்களின் அதிகாரிகளும், சமூகப் பிரமுகர்களும் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

விழாவின் தொடக்கமாக நூருல் இஸ்லாம் மதரஸா மாணவர்கள் பங்கேற்ற நாடகம், நஸீய்த், கிராஅத், இஸ்லாமிய பாரம்பரிய உடையலங்காரப் பேரணி முதலான நிகழ்ச்சிகள் இடம்பெற்றன

அடுத்து, சிங்கப்பூர் திருவிதாங்கோடு சங்கத்தின். தலைமை உஸ்தாத் மௌலவி ரஹ்மத்துல்லா சிறப்புரையாற்றினார்.

புரவலரும் தொழில் முனைவருமான ஹாஜி எஸ்.எம்.அப்துல் ஜலீல் பிபிஎம், வசதி குறைந்த மாணவர்களுக்கான தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கத்தின் கல்வி உதவித் தொகையையும், மதரஸாவின் சிறந்த மாணவர்களுக்கு பட்டயங்களையும் வழங்கிச் சிறப்பித்தார்.

சங்க உறுப்பினர்களும் நண்பர்களுமாக சுமார் 400 பேர் கலந்து கொண்ட அல் மதரஸா நூருல் இஸ்லாம் ஆண்டு விழா மாலை மணி 6.45க்கு மஸ்ஜித் ஜாமியா சூலியாவின் இமாம் யூசுப் காசிமி அவர்களின் துஆவுடன் நிறைவு பெற்றது.

## ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் பணி



ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம் பாத்தாம் தீவில் தொண்டூழியப் பணி புரிந்துள்ளளது.

சங்கத்தின் தொண்டர்கள் அங்குள்ள அனாதைப் பிள்ளைகளுடன் தங்கி அவர்களின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்றினார்கள்

நான்கு வயதுக்கும் பதினைந்து வயதுக்கும் இடைப்பட்ட பிள்ளைகள் வசிக்கும் அனாதை இல்லங்களைப் பார்வையிட்டு ஆவன செய்யும் நல்வாய்ப்பு தங்களுக்குக் கிடைத்ததாக சங்கத்தின் தலைவர் பரிஹுல்லாஹ் தெரிவித்தார்.

சங்கத் தொண்டர்கள் அனாதைப் பிள்ளைகளின் மூத்த சகோதரர்களாகப் பங்காற்றினார்கள். பராமரிப்புடன், பொது வாழ்க்கைத் திறன்கள், சுகாதாரம், ஆரோக்கியம், கலை, கைவினைத் திறன்களையும் எடுத்துரைத்தனர். அவர்களின் பள்ளிக்கூடப் பணிகளிலும் உதவ முடிந்ததாக சங்கப் பொதுச் செயலாளர் ஹாஜா மைதீன் கூறினார்.

ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தினர் தொண்டூழியப் பணி வாய்ப்புகளைக் கண்டறிய கடந்த மார்ச் மாதம் பாத்தாம் தீவுக்குச் சென்றிருந்தனர். அங்குள்ள அனாதைகள், கைவிடப்பட்ட, பின்தங்கிய மற்றும் உடற்குறையுள்ள சிறார்களுக்கு உதவிக் கரம் நீட்ட வேண்டும், ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்பதே இலக்கு. அதற்குக் களம் அமைத்துத் தந்தது பாத்தாம் பயணம் என்று சங்க நிர்வாகிகள் மனநிறைவு தெரிவித்தனர்.

# தொழிலதிபர் ஹாஜி அப்துல் ஜலீலுக்கு சிங்கைச் சீதக்காதியார் விருது

வள்ளல் சீதக்காதி வரலாற்று நாயகர். உமறுப் புலவர் சீறாப்புராணக் காவியத்தை இயற்ற உதவிக்கரம் நீட்டியவர். பஞ்ச காலத்தில் மக்களின் பசிதீர்க்க அன்னதானம் வழங்கியவர். அவருடைய கொடைத் தன்மையை புலவர்கள் பாடினர். ஓயாமல் ஈந்தவர் சீதக்காதி ஒருவரே என்றும் போற்றினர்.

ஈயாத புல்லர் இருந்தென்ன
  போயென்ன எட்டிமரம்
காயாது இருந்தென்ன
  காய்த்துப் பலனென்ன
போயா சகம் என்று உரைப்போர்க்கு
  செம்பொன் பிடிபிடியாய்
ஓயாமல் ஈபவன்வேள்
  சீதக்காதி ஒருவனுமே!

பதினேழாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் வாழ்ந்த காயல்பட்டினத்தைச் சேர்ந்த வள்ளல் அவர்.

சிங்கப்பூரில்-“இப்படிப் பல்வேறு சிறப்புக்குக் காரணமான சீதக்காதியாரின் செயல்பாட்டோடு நமது சிங்கை நாட்டில் வாழும் ஹாஜி எஸ்.எம்.முஹம்மது அப்துல் ஜலீலின் நடைநெறிமுறைகளை ஒப்பிட்டுப் பார்த்தோம். பொருத்தமாகப் பட்டது. அவருக்கு சிங்கைச் சீதக்காதியார் என்ற பட்டத்தை வழங்கி கௌரவிக்கிறோம்.” - சிங்கப்பூர் இந்தியக் கலைஞர் சங்கம் முக்கனி விருந்து நிகழ்ச்சியில் விருது வழங்கிச் சிறப்பித்தது.

“தமிழ்ச் சமுதாயத்திற்கும், எழுத்தாளர்களுக்கும். கலைஞர்களுக்கும், நூலாசிரியர்களுக்கும் ஒட்டுமொத்த சிங்கப்பூர் மக்களின் நலன்களுக்கும் தமது கொடைத்தன்மையால் அபரிமிதமாக அள்ளிக்கொடுத்து, அரவணைக்கும் அன்பு நெஞ்சம் கொண்ட ஹாஜி அப்துல் ஜலீல் அவர்களுக்கு அனைத்து சிங்கப்பூர் மக்களின் சார்பாக சிங்கைச் சீதக்காதியார் எனும் பட்டத்தை இந்த மேடையில் அவருக்குக் கொடுத்து கௌரவிப்பதோடு பொன்னாடை போர்த்தி மகிழ்விக்கிறோம்.”

சங்கத் தலைவர் ச.வரதனின் பாராட்டுரையைத் தொடர்ந்து, தஞ்சோங் பகார்



நாடாளுமன்ற குழுத் தொகுதி உறுப்பினர் திரு. பெய் யாம் கெங் சிங்கைச் சீதக்காதியார் விருதை வழங்கினார்.

### பன்முனைப் பணிகள்

நாகூர் தர்காவை *1.8* மில்லியன் *(18* லட்சம்*)* வெள்ளி செலவில் மரபுடைமை நிலையமாக மேம்படுத்தும் திட்டத்தை செயல் படுத்திவருகிறார், பென்கூலன் பள்ளிவாசலின் நிர்வாகத் தலைவருமான தொழிலதிபர் ஹாஜி அப்துல் ஜலீல். அந்தப்பணிக்கு நிதி திரட்டுவதற்காக அவர் தலைமையில் *20.5.2005*ல் குழு அமைக்கப்பட்டது.

அதற்கான நிதி திரட்டும் விருந்தின் போது தமது மினி என்வைரன்மெண்ட் சர்வீசஸ் நிறுவனத்தின் சார்பில் தனிப்பட்ட முறையில் ஒரு லட்சம் வெள்ளியை அவர் வழங்கியது குறிப்பிடத்தக்கது.

முப்பது பங்களாதேஷ் பணியாளர்களை உம்ரா பயணத்துக்கு அழைத்துச் சென்ற அவருடைய அனுபவம் நினைவில் நிற்கக்கூடியது. மினி என்வைரன்மெண்ட் சர்வீசஸ் நிறுவனத்தின் ஊழியர் விடுதியில் தங்கியுள்ள அவர்களுக்கு அந்த நல்வாய்ப்பு கிடைத்தது. தங்குமிடத்தை சுத்தமாக, துப்புரவுடன் வைத்துக் கொண்டால் *30* பேருக்கு உம்ரா செல்லும் வாய்ப்பு கிடைக்கும் என்று அறிவித்து, அதன்படி குலுக்கல் முறையில் *30* பேரை அவர் தேர்ந்தெடுத்தார்.

### குர்பானி ஆடுகள்

தொழிலதிபர் ஹாஜி எஸ்.எம்.அப்துல் ஜலீல் பிபிஎம், ஹஜ் பெருநாளின் போது நடைபெறும் குர்பானிக்குத் தேவையான ஆடுகளை இறக்குமதி செய்யும் உரிமையைப் பெற்றுள்ளார்.

அல்ஹாஜ் அப்துல் ஜலீல் மினி என்வைரன்மெண்ட் சர்வீசஸ் நிறுவனத்தின் சாதனைத் தடமாக ஜுரோங்கில் வெளிநாட்டு ஊழியர்களுக்கு மாபெரும் விடுதியைக் கட்டுகிறார். சுமார் 25 ஆயிரம் ஊழியர்கள் அதில் தங்கலாம். உணவகங்கள், மருந்தகங்கள், வங்கிகள், காவல் நிலையம் முதலான வசதிகள் அங்கு இருக்கும்.

அபுதாபி, துபாய், கத்தார் ஆகிய ஐக்கிய அரபு நாடுகளிலும் ஹாஜி அப்துல் ஜலீல் வெளிநாட்டு ஊழியர்கள் தங்கும் முகாம்களை அமைத்துவருகிறார். எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் தூய்மையாய் இருப்பவரைத் தவிர வேறு யாரும் உண்மையாளர் அல்லர் என்பது நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் நன்மொழி. நல்லெண்ணம் அழகிய வணக்கமாகும் என்பதும் அவர்களின் நல்லுரை.

இந்த நபிமொழிகள் தம்மை வழிநடத்துவதாகக் கூறுகிறார். அதனால் உழைப்பையும் உதவும் பண்பையும் உயிர்நாடியாகக் கொண்டு செயல்படுகிறார் இந்த சிங்கப்பூர் சீதக்காதி - ஹாஜி எஸ்.எம்.அப்துல் ஜலீல் பிபிஎம். அவருடைய நற்பணி தொடர 'நாடி'யின் நல்வாழ்த்துகள்.

# அல் ஹைர் ஆங்கில மதரஸாவின் (EMAK) முதல் Kids aL.I.V.E பட்டமளிப்பு விழா

அல் ஹைர் ஆங்கில மதரஸாவில் 2006ல் தொடங்கப் பட்ட Kids aL.I.V.E பாடத்திட்டதின் கீழ் 3 ஆண்டுகள் பயின்று முடித்த சுமார் 40 மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா 9.11.2008ல் நடைபெற்றது. முயிஸ் துணை இயக்குனர் திருவாட்டி ஃபாரா அல்ஜுனியட் கௌரவ விருந்தினராக வருகை தந்து சிறப்பித்தார். 2006ல் சுமார் 160 மாணவர்களைக் கொண்டு ஆரம்பித்த EMAKல் தற்போது சுமார் 300 மாணவர்கள் aL.I.V.E பாடத்திட்டதின் கீழ் பயின்று வருகின்றனர்.



சிறப்பு தேர்ச்சிப் பெற்ற மாணவர்களுடன் சிறப்பு விருந்தினர் அல்ஹைர் பள்ளியின் செயலாளர் திரு ஹெர்மான்



சிறப்பு தேர்ச்சிப் பெற்ற மாணவர்களுடன் கௌரவ விருந்தினர் திருவாட்டி ஃபாரா அல்ஜுனியட்



Kids aL.I.V.E மாணவர்களுடன் சிறப்பு விருந்தினர் அல்ஹைர் பள்ளியின் தலைவர் ஹாஜி ரஃபி

# ஜாமியா சிங்கப்பூர் தலைவரின் சாதனைக்கு உயர் விருது

சிங்கப்பூர் முஸ்லிம் சமய மன்றம் - முயிஸ் - ஜாமியா சிங்கப்பூரின் தலைவர் ஹாஜி அபுபக்கர் மைதீன் அவர்களுக்கு விருதளித்துச் சிறப்பித்திருக்கிறது. அனுகெரா ஜாஸா செமர்லாங் (ANUGERAH JASA CEMERLANG) உன்னத விருதை அதிபர் எஸ்.ஆர்.நாதன் வழங்கினார்.

ஹாஜி அபுபக்கர் மைதீன் அவர்களின் தன்னலமற்ற, அர்ப்பணிப்பு மிக்க, நீண்டகால சமூக நலப் பணிகளையும், மனிதாபிமான நல்லிணக்கச் சேவைகளையும் அங்கீகரித்துப் போற்றும்வகையில் அந்த விருதை முயிஸ் வழங்கியது.

ஜாமியா தலைவர் 2004ல் அனுகெரா ஜாஹரி எனும் சாதனையாளர் விருதைப் பெற்றார். பெரித்தா ஹரியான் பத்திரிகையும் மெக்டொனல்டு நிறுவனமும் இணைந்து அந்த விருதை வழங்கிச் சிறப்பித்தன.

"அவர் மனிதருள் மாணிக்கம் என்ற சொல்லுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்பவர். நற்பணிகளுக்கு முன்னுதாரணமாக விளங்குபவர் அவரைப் போல் இன்னொருவரைக் காண்பது அரிது" என்று வெளியுறவுத் துணை அமைச்சரும், வடகிழக்கு சமூக மேம்பாட்டு மன்ற மேயருமான ஜைனல் ஆபிதீன் ரஷீத் அப்போது புகழாரம் சூட்டியதை மறக்க முடியுமா?

## நல்லிணக்கப் பயணத் திட்டம்

ஹாஜி அபுபக்கர் மைதீன் ஆற்றிவரும் நற்பணிகள் நாடறிந்தவை. நல்லிணக்கப் பயணத் திட்டம் (Touch of Harmony) அரிய முன்னுதாரணம். அவரும் மெக்சிகோ நாட்டின் தூதராக சிங்கப்பூரில் பணியாற்றிய ரமோஸ்-கோமெஸும் 2004-ல் அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தனர். பல இன, சமய மக்களிடையே நல்லிணக்கத்தையும் அமைதியையும் உருவாக்கும் நோக்கில், உலகளாவிய இளைஞர் பரிமாற்றத்திற்கு வகைசெய்யும் திட்டமே அது.



மாணவர்களும் இளைஞர்களும் உயர்கல்வி கற்கும் இத்திட்டதின் கீழ், நியூயார்க் பல்கலைக் கழக உயர்கல்விச் சேவைப் பிரிவுடன் ஜாமியா சிங்கப்பூர் தொடக்கமாக உடன்பாடு செய்து கொண்டது. நியூயார்க் மாணவர்களும் சிங்கப்பூர் மாணவர்களும் சேர்ந்து பல்கலைக் கழகக் கல்வி பயில ஏற்பாடு செய்யப்பட்டது. இந்து, கிறிஸ்துவ, புத்த சமய அமைப்புகளும் இத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்கின.

ஜாமியா சிங்கப்பூர் கடந்த ஆண்டு 4 மாணவர்களையும் 2 பராமரிப்பாளர்களையும் நியூயார்க் நகருக்கு அனுப்பியது.

நல்லிணக்கப் பயணத்திட்டம் பல சமூக, சமய, கலாசாரப் புரிந்துணர்வுக்கான கல்விக் களமாகத் திகழ்வது குறித்து ஹாஜி அபுபக்கர் மைதீன் மகிழ்ச்சியும் மனநிறைவும் தெரிவித்தார். இத்திட்டத்தை மேலும் பிரிட்டன், சுவிட்சர்லாந்து, ஸ்பெயின் மற்றும் பல ஆசிய பசிபிக் நாடுகளுக்கு விரிவுபடுத்த ஜாமியா சிங்கப்பூர் விரும்புகிறது. அந்த நாடுகளும், சிங்கப்பூரிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களும் இத்திட்டம் குறித்து ஆலோசனை தெரிவிக்க வேண்டும் என ஜாமியா தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

லீ அறக்கட்டளை, நல்லிணக்க கல்விப் பயணத் திட்டத்திற்கு உதவியும் ஒத்துழைப்பும் நல்கி வருகிறது.